©
தமிழ் நாடு அரசு
2015

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை : ரூ. 1.60 காசு

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 22] சென்னை, புதன்கிழமை, ஜூன் 3, 2015
வைகாசி 20, மன்மத, திருவள்ளுவர் ஆண்டு–2046

## பகுதி II—பிரிவு 2 இன் இணைப்பு

### அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

**தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை**

**அறிவிக்கை**

*[அரசாணை (நிலை) எண் 29, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (H2)த் துறை, 9 பிப்ரவரி 2015.]*

1961 ஆம் ஆண்டு மகப்பேறு நலச் சட்ட (மத்தியச் சட்டம் 27/1961)த்தின் 2 ஆம் பிரிவைச் சேர்ந்த உட்பிரிவு (1) ன் விதித்துறையின் கீழ் தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், மேற்சொன்ன சட்டத்தின் அனைத்து விதிகளும் 1961 ஆம் ஆண்டு மோட்டார் வாகனப் போக்குவரத்துத் தொழிலாளர் சட்ட(மத்தியச் சட்டம் 27/1961)த்தின் 2 ஆம் பிரிவைச் சேர்ந்த (g) பகுதியில் வரையறுக்கப்பட்டுள்ளவாறு, தமிழ்நாடு மாநிலத்திலுள்ள மோட்டார் வாகனப் போக்குவரத்து நிறுவனங்களில் நடைமுறைப்படுத்தும் நோக்கத்தினை, இதனால் அறிவிக்கிறார்.

2. ***தமிழ்நாடு அரசிதழில்*** இந்த அறிவிக்கை வெளியிடப்படுகின்ற நாளிலிருந்து இரண்டு திங்கள் முடிவடைவதற்கு முன்னர் இது தொடர்பாக யாதொரு நபர்களிடமிருந்து அல்லது அமைப்புகளிடமிருந்து பெறப்படும் ஏதேனும் மறுப்புரை அல்லது கருத்துரையை தமிழ்நாடு அரசு கருதிப்பார்க்கும் மறுப்புரைகள் அல்லது கருத்துரைகள் எவையேனுமிருப்பின் அவற்றை. தமிழ்நாடு அரசு செயலாளர். தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, புனித ஜார்ஜ கோட்டை, சென்னை–600 009. என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

**எம். வீர சண்முக மணி,**
*அரசு செயலர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*மொழிபெயர்ப்பு தமிழ் வளர்ச்சி (மற்றும்)*
*செய்தித் துறை.*

## தொழில் துறை

*[அரசாணை (நிலை) எண் 79, தொழில் (எம்எம்சி.1) துறை, 6 ஏப்ரல் 2015.]*

### அறிவிக்கை

**1957** ஆம் ஆண்டு, சுரங்கம் மற்றும் கனிமப்பொருட்கள் (மேம்பாடு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் **67/1957**) **15** ஆம் பிரிவைச் சேர்ந்த **(1)** மற்றும் **(1–**A) உட்பிரிவுகளில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் தமிழ்நாடு **1959** ஆம் ஆண்டு, சுரங்கம் மற்றும் கனிமப்பொருட்கள் சலுகை விதிகளில் பின்வரும் திருத்தங்களை, இதனால் செய்கிறார்.

### திருத்தங்கள்

மேற்சொன்ன விதிகளில், **40** ஆம் விதிக்குப் பின்னர், பின்வரும் விதிகள் சேர்த்துக்கொள்ளப்படவேண்டும், அவையாவன:—

*"41. குத்தகை உரிமம் வழங்குவதற்கு, சுரங்கப்பணித் திட்டம் ஒரு முன்தேவை மற்றும் கருங்கல் நீங்கலான இதர சிறு கனிமங்களுக்கு சுரங்கப்பணித்திட்டம் சமர்ப்பித்தலும் ஏற்பளித்தலும்"*

**1.** நேர்விற்கேற்ப, தொடர்புடைய மாவட்டத்திற்குத் தக்கவாறு, புவியியல் மற்றும் சுரங்கத்துறை, உதவி இயக்குநர் அல்லது துணை இயக்குநர், இந்த விதிகளில் **6, 7, 8, 8–**A, **12, 17, 18, 19** மற்றும் **38–**A விதிகளின் கீழான ஒரு செயல்முறை உத்தரவு மூலம் ஏற்பளித்துள்ள சுரங்கப்பணித் திட்டம் இன்றி, மற்றபடி சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர் குத்தகை உரிமம் வழங்குதல் அல்லது புதுப்பித்தல் கூடாது.

**2.** கருங்கல் நீங்கலான சிறு கனிமங்களுக்கான குத்தகை உரிமத்துக்காக மாவட்ட ஆட்சியர் வரையறை செய்துள்ள பகுதியில் சுரங்கப்பணி செய்வதற்கான திட்டத்தினை ஏற்பளிப்பு செய்யும் அதிகாரம் மாவட்டத்தின் புவியியல் மற்றும் சுரங்கத்துறை, உதவி இயக்குநர் அல்லது துணை இயக்குநருக்கு அளிக்கப்பட்டுள்ளது.

**3.** சுரங்கப்பணித்திட்டம் அங்கீகரிக்கப்பட்ட நபரால் தயாரிக்கப்படுதல் :–(i) இந்திய சுரங்கச் செயலகத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ள தகுதியுள்ள நபர் அல்லது இந்த நோக்கத்திற்காக, மாநில அரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ள தகுதியுள்ள நபரால் தயாரிக்கப்பட்டிருந்தாலன்றி, மற்றபடி சுரங்கப்பணித்திட்டம் ஏற்பளிக்கப்படலாகாது:

(ii) தகுதி பெற்றிராத எந்த ஒரு நபருக்கும் பகுதி **(1)**ல் குறிப்பிட்டுள்ள சிறு கனிமப் பொருட்கள் தொடர்பான நோக்கத்திற்காக மாநில அரசாங்கம் அல்லது இந்தியச் சுரங்கச் செயலகம், அங்கீகாரம் வழங்கலாகாது:–

(அ) மத்தியச் சட்டம் (அல்லது) மாநிலச்சட்டத்தின் படி நிறுவப்பட்டுள்ள அல்லது அதனுடன் இணைக்கப்பட்டுள்ள ஒரு பல்கலைக்கழகம் அல்லது **1956** ஆம் ஆண்டு பல்கலைக்கழக மானியக்குழு (மத்தியச் சட்டம் **3/56**) சட்டத்தின் **4**ஆம் பிரிவின் படி நிறுவப்பட்டுள்ள பல்கலைக் கழக மானியக் குழுவால் அங்கீகரிக்கப்பட்டுள்ள ஒரு கல்வி நிறுவனத்தால் சுரங்கப் பொறியியலில் வழங்கப்பட்டுள்ள ஒரு இளங்கலைப் பட்டம் அல்லது புவியியலில் முதுகலைப் பட்டம் அல்லது அதற்கு இணையான எந்தவொரு கல்வித்தகுதி; மற்றும்

(ஆ) இளங்கலைப் பட்டம் அல்லது பகுதி (அ) வின் கீழ் வரையறுக்கப்பட்டுள்ள கல்வித் தகுதி பெற்ற பின்னர், சுரங்கம் அல்லது கனிமப் பொருள் நிருவாகத்தில் மேற்பார்வையாளர் தகுதியில் மூன்றாண்டுகள் பணியாற்றிய தொழில் முன் அனுபவம்.

**(4)** சுரங்கத் திட்டம் பணிந்தனுப்புதலும் ஏற்பளித்தலும்:–இந்த விதிகளின் கீழ் குத்தகை உரிமம் கோரி மனு வரப்பெற்றதும், குத்தகை கோரப்பட்டுள்ள பகுதி அதற்குத் தகுதியுடையதாக இருந்து, மனு இதர தொடர்புடைய அம்சங்களில் சரியாக இருப்பின், மாவட்ட ஆட்சியர், குத்தகை உரிமம் குறித்து ஒரு முடிவு மேற்கொண்டு, குத்தகைக்குரிய வரையறுக்கப்பட்ட பகுதி குறித்து மனுதாருக்குத் தகவல் தெரிவிக்கவேண்டும்.

**(5)** மாவட்ட ஆட்சியரிடமிருந்து உரிய வரையறுக்கப்பட்ட பகுதி குறித்த தகவல் வரப்பெற்றதும், மனுதாரர் தொண்ணூறு நாட்களுக்குள் வரைவு சுரங்கப் பணித்திட்டத்தினை அந்த மாவட்டத்திற்குத் தக்கவாறு, நேர்விற்கேற்ப, புவியியல் மற்றும் சுரங்கத்துறை, உதவி இயக்குநர் அல்லது துணை இயக்குநருக்குப் அனுப்பப்பட வேண்டும். மனுதாரிடமிருந்து வரைவு சுரங்கப்பணித் திட்டம் கிடைக்கப்பெற்ற நாளிலிருந்து தொண்ணூறு நாட்களுக்குள் கூர்ந்தாய்வு செய்யப்பட்டு ஒப்புதல் வழங்கப்படவேண்டும் அல்லது, திருத்தங்கள் செய்து மீளப்பணிந்தனுப்புமாறு மனுதாருக்குத் திருப்பி அனுப்பப்படவேண்டும்.

**(6)** வரையறுக்கப்பட்ட கால அளவுக்குள் மனுதாருக்கு எவ்விதத் தகவலும் தெரிவிக்கபடமாலிருந்தால், மனுதாரர் அளித்துள்ள வரைவு சுரங்கப் பணித் திட்டம் அல்லது திருத்தப்பட்ட வரைவு சுரங்கப்பணித் திட்டம், இறுதி முடிவு தெரிவிக்கப்படும் வரையில், தற்காலிகமாக எற்பளிக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படும், அத்தகைய ஒப்புதல் இறுதி முடிவின் நிபந்தனைக்குட்பட்டதாக இருக்கவேண்டும்.

**(7)** சுரங்கப் பணித்திட்ட ஒப்புதல் கருதிப் பார்க்கப்படும்போது, மாவட்டத்திற்குத் தக்கவாறு புவியியல் மற்றும் சுரங்கத்துறை, உதவி இயக்குநர் அல்லது துணை இயக்குநர் *(i)* உற்பத்தி அளவு, *(ii)* இயந்திரப் பயன்பாட்டு அளவு, *(iii)* சிறுகனிமச் சுரங்கத்துக்குப் பயன்படுத்தும் இயந்திர வகை, *(iv)* டீசல் பயன்பாட்டு அளவு, *(v)* சுரங்கப் பணிக்காக வெட்டி அகற்றப்படும் மரங்கள், *(vi)* சிறு கனிமத்தின் ஏற்றுமதி, இறக்குமதி மற்றும் *(vii)* சுரங்கக் கழிவு அல்லது குப்பை சேமிப்பு முதலியவற்றைக் கருத்தில் கொள்ளவேண்டும்.

**(8)** வரைவு சுரங்கப் பணித்திட்டம் பின்வரும் விவரங்களைக் கொண்டதாக இருக்கவேண்டும், அவையாவன:–

(i) வரையறுக்கப்பட்ட பகுதியின் இயற்கை மற்றும் சிறு கனிமங்களின் பரப்பினைக் காட்டும் வரைபடம்;

(ii) முதல் ஐந்தாண்டுப் பணிக்காலத்தில் அகழ்வு மேற்கொள்ளப்பட வேண்டிய இடம் அல்லது இடங்கள் மற்றும் அவற்றின் பரப்பு;

(iii) குத்தகையின் முதல் ஐந்தாண்டில் அகழ்ந்தெடுக்கப்டுவதற்கான தற்காலிகத் திட்டம்;

(iv) வரையறுக்கப்பட்ட பகுதியின் சிறுகனிமப் படிவு இருப்பு உட்பட புவியியல் மற்றும் பாறையியல் விவரங்கள்;

(v) வரையறுக்கப்பட்ட பகுதியில் உடலுழைப்பு மூலம் மேற்கொள்ளும் அகழ்வுப் பரப்பு மற்றும் இயந்திரம் மற்றும் எந்திரக் கருவி பயன்படுத்தப்படும் அகழ்வுப் பரப்பு. வரையறுக்கப்பட்ட பகுதியில் உள்ள இயற்கை நீர்வழிகள், காப்பு வனம் மற்றும் இதர வனங்களின் எல்லைகள் மற்றும் மரங்கள் ஏதேனுமிருப்பின் அவற்றின் அடர்த்தி, காற்று மற்றும் தண்ணீர் மாசுபடுதல் உள்ளிட்டு வன நிலத்தின் மேற்பகுதி மீதும், சுற்றுச் சூழல் மீதும் சுரங்கம் தோண்டுதல் ஏற்படுத்தும் தாக்கம்; காடுவளர்ப்பு மூலம் அப்பகுதியை மீள அமைத்தல், நிலமீட்பாக்கம், மாசு கட்டுப்பாட்டுக் கருவிகள் பயன்படுத்தல் மற்றும் அதுபோன்ற ஏனைய நடவடிக்கைகள்;

(vi) வரையறுக்கப்பட்ட பகுதியில் ஒவ்வொரு ஆண்டும் அகழ்ந்தெடுக்கும் திட்டம் மற்றும் ஐந்து ஆண்டுகளுக்கு ஆண்டுக்கு ஆண்டு ஆண்டுவாரியாக அகழ்ந்தெடுக்கும் திட்டம்;

(vii) ஐந்து கிலோமீட்டர் ஆரமுடைய பகுதிக்குள் சிறு கனிமம் அகழ்ந்தெடுக்கும் மையப்பகுதியிலிருந்து ஐம்பது ஹெக்டேர் பரப்புக்குக் குறைவான சிறுகனிமக் குத்தகைகள் அடங்கிய தொகுதிக்கு மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திடம் சுற்றுச்சூழல் மறுப்பில்லாச் சான்று பெறவேண்டு; மற்றும்

(viii) தேவையெனக் கருதி, மாநில அரசால் விதிக்கப்படவேண்டிய இதர நிபந்தனைகள் ஏதேனுமிருப்பின், அவை சுரங்கப் பணித்திட்டத்தில் சேர்க்கப்படவேண்டும்.

**(9)** சுரங்கப் பணித்திட்ட ஆய்வு:– **(i)** இந்த விதிகளின் கீழ் ஏற்பளிக்கப்படும் ஒவ்வொரு சுரங்கப் பணித்திட்டமும் ஐந்து ஆண்டுகள் செல்திறனுடையது. ஐந்து ஆண்டுகளுக்கு மேலும் கல்வெட்டுதல் / சுரங்கப் பணிக்குக் குத்தகை தேவையெனில், குத்தகைதாரர் சுரங்கப் பணித்திட்டத்தினை மீளாய்வு செய்து, மறுமதிப்பிட்டு அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கான திட்டத்தினை அனுப்பவேண்டும்.

*(ii)* குத்தகைக் காலத்திற்குள்ளேயே ஏற்பளிக்கப்பட்ட சுரங்கப்பணித் திட்டத்தில் திருத்தங்கள் தேவைப்பட்டால், குத்தகைதார், அத்தகைய திருத்தங்களை மேற்கொண்ட பின்னர், திருத்தப்பட்ட சுரங்கப்பணித் திட்டத்தினை நேர்விற்கேற்ப புவியியல் மற்றும் சுரங்கத்துறை, உதவி இயக்குநர் அல்லது துணை இயக்குநருக்கு ஏற்புக்காக மீளப் பணிந்தனுப்பவேண்டும்.

*(iii)* நேர்விற்கேற்ப, புவியியல் மற்றும் சுரங்கத்துறை, உதவி இயக்குநர் அல்லது துணை இயக்குநர், திருத்தப்பட்ட சுரங்கப் பணித்திட்டம் கிடைக்கப்பெற்ற நாளிலிருந்து தொண்ணூறு நாட்களுக்குள் ஏற்பளிக்கப்பட்ட அல்லது ஏற்பளிக்கப்படாத விபரத்தினை குத்தகைதாருக்குத் தெரிவிக்கவேண்டும். ஏற்பளிக்கப்படாத இனமெனில் மேற்சொன்ன திருத்தப்பட்ட சுரங்கப் பணித்திட்டம் ஏற்கப்படாமைக்கான காரணங்களையும் தெரிவிக்க வேண்டும்.

*(iv)* வரையறுக்கப்பட்ட கால அளவிற்குள் மனுதாருக்கு திருத்தப்பட்ட வரைவு சுரங்கப்பணித் திட்டம் குறித்து எவ்விதத் தகவலும் தெரிவிக்கப்படமாலிருந்தால், இறுதி முடிவு தெரிவிக்கப்படும் வரையில், திருத்தப்பட்ட வரைவு சுரங்கப் பணித் திட்டம், தற்காலிகமாக ஏற்பளிக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படும்.

**(10)** சுரங்கப்பணித் திட்டத்தின்படி அகழ்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல்:–

*(i)* குத்தகைதாரர் ஒவ்வொரும் ஏற்பளிக்கப்பட்ட சுரங்கப் பணித்திட்டத்தின்படி மட்டுமே சுரங்கம் அமைக்கும் பணி நடவடிக்கைகள் மேற்கொள்ளவேண்டும்.

*(ii)* சுரங்கப்பணித் திட்டத்தின்படி அகழ்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லையெனில் மாவட்ட ஆட்சியர் சுரங்கம் தோண்டும் பணியைத் தற்காலிகமாக நிறுத்திவைக்குமாறு உத்திரவிட்டு, மேற்சொன்ன சுரங்கப்பணித் திட்டத்தின்படி வகைசெய்யப்பட்டவாறான நிபந்தனைகளை நிறைவேற்றிப் பெற்றபின், சுரங்கப்பணிகளைத் தொடர அனுமதிக்கலாம்.

*(iii)* இந்த விதிகள் நடைமுறைக்கு வரும் முன்னர், ஏற்பளிக்கப்பட்ட சுரங்கப் பணித்திட்டம் இல்லாமலேயே கருங்கல் நீங்கலான சிறுகனிமப் பொருட்கள் தொடர்பான அகழ்வுப் பணி தொடங்கப்பட்டுள்ள இனங்களில், அத்தகைய சிறுகனிம நடப்புக் குத்தகைதாரர், இந்த விதிகள் நடைமுறைக்கு வந்த நாளிலிருந்து தொண்ணூறு நாட்களுக்குள் வரைவு சுரங்கப் பணித்திட்டத்தினை நேர்விற்கேற்ப, புவியியல் மற்றும் சுரங்கத் துறை, உதவி இயக்குநர் அல்லது துணை இயக்குநருக்கு அனுப்ப வேண்டும்.

*(iv)* மனுதாரிடமிருந்து வரைவு சுரங்கப்பணித் திட்டம் கிடைக்கப்பெற்ற நாளிலிருந்து தொண்ணூறு நாட்களுக்குள், அவை கூர்ந்தாய்வு செய்யப்பட்டு ஏற்பு வழங்கப்படவேண்டும் அல்லது, திருத்தங்கள் செய்து மீளப்பணிந்தனுப்புமாறு மனுதாருக்குத் திருப்பி அனுப்பப்படவேண்டும்.

(v) குறித்த காலத்திற்குள் மனுதாருக்கு எவ்விதத் தகவலும் தெரிவிக்கப்படமாலிருந்தால், மனுதார் அளித்துள்ள வரைவு சுரங்கப் பணித் திட்டம் அல்லது திருத்தப்பட்ட வரைவு சுரங்கப்பணித் திட்டம், இறுதி முடிவு தெரிவிக்கப்படும் வரையில், தற்காலிகமாக ஏற்பளிக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படும்.

(vi) கருங்கல் நீங்கலான இதர சிறுகனிமப்பொருட்கள் நடப்புக் குத்தகைதாரர் குறித்த காலத்துக்குள் ஏற்பளிக்கப்பட்ட சுரங்கப் பணித்திட்டத்தினைச் சமர்ப்பிக்கத் தவறினால், நேரில் தன்னிலை விளக்கம் அளிப்பதற்கான வாய்ப்பளித்த பின்னர், சிறுகனிமப் பொருள் குத்தகைகளை மாவட்ட ஆட்சியர், இரத்துசெய்யவேண்டும்.

*"42. கருங்கல் உள்ளிட்ட சிறுகனிமப் பொருட்கள் சுரங்கக் குத்தகை வழங்க சுற்றுச்சூழல் தடைநீக்க அனுமதி சமா்ப்பித்தல்":—*

*(i)* நேர்விற்கேற்ப, மாநில அளவிலான சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் அல்லது சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகத்தில் மனுதார் சுற்றுச்சூழல் தடைநீக்க அனுமதி பெறுவதற்காக, மனுதாருக்கு ஏற்பளிக்கப்பட்ட சுரங்கப் பணித்திட்டம் அளிக்கப்படவேண்டும்.

*(ii)* மனுதாரிடமிருந்து ஏற்பளிக்கப்பட்ட சுரங்கப் பணித்திட்டம் மற்றும் சுற்றுச்சூழல் தடைநீக்க அனுமதி வரப்பெற்றதும் நேர்விற்கேற்ப, அரசு அல்லது மாவட்ட ஆட்சியர் சுரங்கக் குத்தகை உரிமம் வழங்கவேண்டும்.

*(iii)* இந்த விதிகள் நடைமுறைக்கு வருவதற்கு முன்னர், சுற்றுச்சூழல் தடைநீக்க அனுமதி இல்லாமலேயே கருங்கல் உள்ளிட்ட சிறுகனிமப் பொருட்கள் அகழ்வுப் பணி தொடங்கப்பட்டுள்ள இனங்களில், அத்தகைய கருங்கல் உள்ளிட்ட சிறுகனிம நடப்புக் குத்தகைதாரர், இந்த விதிகள் நடைமுறைக்கு வந்த நாளிலிருந்து நூற்று எண்பது நாட்களுக்குள் சுற்றுச்சூழல் தடைநீக்க அனுமதியினைப் பணிந்தனுப்ப வேண்டும்.

*(iv)* கருங்கல் உள்ளிட்ட சிறுகனிமப்பொருட்கள் நடப்புக் குத்தகைதாரர்கள் குறித்த காலத்துக்குள் சுற்றுச்சூழல் தடைநீக்க அனுமதியினைச் சமர்ப்பிக்கத் தவறினால், நேரில் தன்னிலை விளக்கம் அளிப்பதற்கான வாய்ப்பளித்த பின்னர், சிறுகனிமப் பொருள் குத்தகையினை நேர்விற்கேற்ப, அரசு அல்லது மாவட்ட ஆட்சியர் இரத்து செய்யவேண்டும்.

(ஆளுநர் ஆணைப்படி)

**சி. வி. சங்கர்,**
*அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*மொழிபெயர்ப்பு தமிழ் வளர்ச்சி*
*(மற்றும்) செய்தித் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.